தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 6-12-2017

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் முதுகலை ஆராய்ச்சி மாணவர்களுக்கு தொடங்கப்பட்ட வேளாண் ஆராய்ச்சிக்கான உதவித்தொகை

வேளாண் தொழில்நுட்ப வளர்ச்சியில் முதன்மை பகுதிகளில் ஆராய்ச்சிகளை ஊக்குவிக்க மற்றும் முனைவர் படிப்பிற்கான ஆராய்ச்சியை ஊக்குவிக்க தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் துணைவேந்தர் உதவித்தொகை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு மாணவருக்கு மாதந்தோறும் ரூ.10,000 மற்றும் ஒரு ஆண்டிற்கு ரூ.75,000 ஆராய்ச்சி உதவித்தொகை இரண்டு ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது. இதற்கு அனைத்து முனைவர் படிப்பு மாணவர்களும் விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள். இதற்காக நடப்பாண்டில் மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட 17 விண்ணப்பங்களிலிருந்து 4 விண்ணப்பங்கள் தேர்வு செய்யப்பட்டது. மை.த.ஆண்ட்ரூ பீட்டர் லியோன் (மரபியல் மற்றும் பயிர் பெருக்கம்), பொ. சுரேஷ் (நூற்புழுவியல்), ஈ.சத்யப்பிரியா (வேளாண் விரிவாக்கம் மற்றும் ஊரக சமூகவியல்) மற்றும் வே.திவ்யா (வேளாண் பூச்சியியல்) ஆகியோரின் தரமான வேளாண் ஆராய்ச்சி திட்டத்தின்படி தேர்வு செய்யப்பட்ட மாணவர்கள் ஆவர்.

வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு.ராமசாமி அவர்கள் தேர்வான மாணவர்களுக்கு உறுதிச் சான்றிதல்களை வழங்கி மாணவர்களுக்கு ஆராய்ச்சியின் முக்கியத்துவம் பற்றியும், உயர் தர வேளாண் ஆய்வு வெளியீடுகளில் பிரசுரிப்பதின் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துரைத்தார்.

மேலும், முதுகலைக் கல்லூரி முதல்வர் உ. சிவக்குமார் அவர்கள் தேர்வான மாணவர்களிடையே தரமான ஆராய்ச்சி மற்றும் உயர்தர வேளாண் ஆய்வு வெளியீடுகளின் முக்கியத்துவம் பற்றி விளக்கினார். தரமான வெளியீடுகளில் பிரசுரிப்பதின் மூலம் உலக

ஆராய்ச்சியாளர்களின் கவனத்தை எளிதில் ஈர்க்க முடியும். மேற்கொண்ட நோக்கத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட முனைவர் படிப்பு மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களுக்கு சென்ற மாதம் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இரு பயிற்சி வகுப்புகள், டிசம்பர் 2017 மற்றும் சனவரி 2018ல் நடத்தப்படவுள்ளதாக கூறினார்.

பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் து. சுதாகர் அவர்களும் மேற்கண்ட கருத்தினை வலியுறுத்தி 2018க்குள் அனைத்து மாணவர்களும் தரமான வெளியீடுகளில் பிரசுரிக்க பயிற்றுவிக்கப்படுவார்கள் எனக் கூறினார்.

தேர்வான மாணவர்களில் ஒருவர் கூறும் போது, வேளாண் ஆராய்ச்சிக்கான உதவித்தொகை "தேர்வு முறையானது மிகவும் கடினமாகவும், நேர்மையாகவும் இருந்தது". மேலும் தேர்வின் போது வழங்கப்பட்ட அறிவுரைகளை பூர்த்தி செய்யவும் வலியுறுத்தப்பட்டன. மொத்தம் 5 மாணவர்களுக்கு வழங்கப்பட இருந்த உதவித்தொகை ஆராய்ச்சியின் தரத்தை கருத்தில் கொண்டு 4 மாணவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டது.

பல்கலைக்கழகமானது அடுத்த ஆண்டிற்கான (2018) சிறந்த ஆராய்ச்சிக்கான துணைவேந்தர் உதவித்தொகைக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

முனைவர் படிப்பில் சிறந்த ஆராய்ச்சிக்கான உதவித் தொகையை முதன்முதலில் அறிமுகப்படுத்தி வழங்கிய எங்களது துணைவேந்தர் முனைவர். கு. ராமசாமி மற்றும் கல்லூரி முதல்வர் முனைவர் உ.சிவக்குமார் அவர்களுக்கு நன்றி. இத்தகைய உதவித்தொகை மாணவர்களிடையே விவசாயிகளுக்காக புதிய தொழில்நுட்பங்களை கண்டறிய ஊக்குவிக்கிறது என்று ஆராய்ச்சி மாணவர்கள் நன்றியை பதிவு செய்தனர்.

இத்தகைய உதவித்தொகையை முதன் முதலில் வேளாண் மாணவர்களான சுரேஷ், சத்யப்பிரியா, திவ்யா, ஆண்ட்ரூ பீட்டர் லியோன் ஆகியோர் பெருவதில் மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்தனர். இத்தகைய நிகழ்வானது மாணவர்கள் விவசாயிகளுக்கு உதவும் புதிய ஆராய்ச்சிகளை கண்டறிய ஊக்குவிக்கிறது. மேலும் மற்ற மாணவர்களிடையே தரமான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள ஊக்கம் அளிக்கும் வண்ணம் அமைகிறது. ஆராய்ச்சிக்கான உதவித்தொகை எங்களது படிப்பு மற்றும் ஆராய்ச்சிக்கான செலவிற்கு பயனள்ளதாக உள்ளது. எங்கள் அனைவரது ஆராய்ச்சியும் வழங்குகின்ற விவசாயத்தை ஊக்குவிக்கும் வண்ணம் உள்ளது என மாணவர்கள் தெரிவித்தனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்